**cross**

**E.P .No. 82/2023**

**Date: 06.08.2025**

**எதிர் மனுதாரர்  1 முருகேசன்**

**மனுதாரர்  தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மலையடிக்குறிச்சி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தமி.ழ் படிக்க தெரியும். மனுதாரா் நிறுவனத்தில் 2 வாகனங்களுக்கு கடன் பெற்றிருக்கிறேன். TN 72 Q 1192 என்ற டாட்டா ஏசி வாகனத்திற்கு கடன் வாங்கியிருந்தேன். மற்றொரு வாகனம் TN 76 E 5540 என்ற டாட்டா இண்டிகா வாகனத்திற்கு கடன் வாங்கியிருந்தேன். இந்த வழக்கு டாட்டா ஏசி வாகனத்திற்கு உரிய வழக்கு என்றால் சரிதான். நான் கதிர் அறுக்கும் இயந்திரத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். மேற்படி வாகனத்திற்கு சம்பளம் எவ்வளவு என்றால் ரூ500/ கொடுக்கிறார்கள். நான் குடியிருக்கும் வீடு எனது சொந்த வீடு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணம் எதிர் மனுதாரர் தரப்பு ஆவணம் 1 வாகன கடன் வழங்கியதற்கான ஒப்பந்த கடிதம் என்றால் சரிதான். 2 வது ஆவணம் மாதத் தவணை தொகைக்காக கடிதம் என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிர் மனுதாரர் தரப்பு ஆவணம் 1 ல் TN 72 Q 1192 என்ற டாட்டா ஏசி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிர் மனுதாரர் தரப்பு ஆவணம் 3 ல் எந்த வாகனத்திற்கான எண் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 4 வது ஆவணத்தில் வழக்கு எண்ணோ அல்லது தொகைகளோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 3 வது ஆவணம் சங்கரன்கோவில் குற்றவியல் நீதித்துறை நடுவா் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சி.சி. 914/2014 க்கான அழைப்பாணை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வழக்கிற்கான தொகை செலுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், நான் சொன்னது போல இந்த வழக்கிற்கான தொகை செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள

உறுதிக் கூற்றில் 31.08.2014 ம் தேதியில் ரூ, 10,000/- யும் 12.09.2014 ம் தேதியில் ரூ, 10,000/- யும் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 3 வது ஆவணத்திற்கு சம்பந்தப்பட்ட சி.சி. 914/2014 என்ற வழக்கு முடிந்து விட்டது என்பதை காட்டும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் வேலை எதுவும் செய்யாமல் இருந்து வருகிறார். இந்த வழக்கில் தொகை எதுவும் நான் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தொகை செலுத்திவிட்டதாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த உறுதிக் கூற்றில் 23.02.2013, 27.05.2013, 13.08.2013 ஆகிய தேதிகளில் மனுதாரர் நிறுவனத்திலிருந்து அறிவிப்பு அனுப்பபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞபாகமில்லை. நான் குறிப்பிட்டுள்ளவாறு அறிவிப்பு அனுப்பபட்டிருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. ரூ, 20,000/- செலுத்தியதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கும் 2ம் எதிர் மனுதாரருக்கும் போதிய வசதி இருந்தும் பணத்தை செலுத்ததால் தீர்ப்பு தொகையை வசூலிக்கும் பொருட்டு கைது செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மனுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.